விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 078 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 23 திங்கட்கிழமை (07.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## டெங்கு காய்ச்சலினால் பாலகன் உயிரிழப்பு

**மீசாலை வடக்கில் பரிதாபம்**




(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சல் காரணமாக ஒரு வயது 5 மாதங்கள் நிரம்பிய பாலகன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

கொடிகாமம், மீசாலை வடக் 15

## வவுனியாவில் விபத்து; தந்தையும் தனயனும் பலி

### பேருந்தை அடித்து நொருக்கிய மக்கள்



(வவுனியா) வவுனியா குருக்கள் புதுக்குளம் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் தந்தை மற்றும் மகன் பரிதாபமாக பலியாகினர்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த கிராம மக்கள் ஒன்றுதிரண்டு பேருந்தினை அடித்து நொருக்கியதனால் குறித்த பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)

## ஆடைத் தொழிற்சாலை ஊழியர் விபத்தில் பலி

**கிளிநொச்சியில் சம்பவம்**

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு அம்பாள்நகர் பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

இரணைமடு பகுதியிலிருந்து ஏ9 வீதி நோக்கி பயணித்த ஐஸ் கிறீம் வியாபார ஊர்தியுடன் எதிரே பய 15

### போர்க்குற்றச்சாட்சியங்களை திரட்டுவதற்காக

# இலங்கை வரவிருந்த ஐ.நா குழுவுக்கு தடை

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட 28 பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு எதிரான போர்க்குற்றச் செயல் சாட்சியங்களைத் திரட்டும் நோக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய அரசாங்கம் தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டினால் இந்த பிரதிநிதிகள் குழு அனுப்பி வைக்கப்படவிருந்தது. விசாரணையாளர், 15

## ஆட்சியை கவிழ்ப்போம்

**சஜித் சூளுரை**

(பதுளை)

குப்பி விளக்கின் வெளிச்சத்திலேயே ஜனாதிபதியின் சுபீட்சத்தின் தொலைநோக்கு விஞ்ஞாபனத்தை வாசிக்க வேண்டிய 15

## மீண்டும் 7½ மணித்தியாலம் மின்வெட்டு

(கொழும்பு)

இன்றைய தினமும் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 15

**இலங்கை கோரிய கடனுக்கு**

## கடுமையான நிபந்தனை விதித்தது இந்தியா

3ஆம் பக்கம் பார்க்க

## வீட்டில் வெடிபொருட்கள்; கணவனும் மனைவியும் கைது

**புதுக்குடியிருப்பில் சம்பவம்**

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலைப் பகுதியில் வீட்டில் வெடிபொருட்கள் வைத்திருந்த கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் 15

## விமல், கம்மன்பிலவுக்கான பாதுகாப்பை குறைக்காதீர்

**பிரதமர் மகிந்த பணிப்பு**



(கொழும்பு)

அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் 15

## ஒட்டுசுட்டானில் வாள்வெட்டு; நான்கு பேர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பகுதியில் குடும்ப உறவினர்கள் இரு பகுதியினருக்கு இடையில் நீண்டகாலம் ஏற்பட்ட காணிப் பிணக்கு நேற்று முன்தினம் இரவு கைகலப்பாக மாறிய நிலையில் வாள்வெட்டுத் தாக்குதலுக்குள்ளாகி நால்வர் படுகாயம் அடைந் 15

## கூட்டமைப்பு உறுப்பினரின் வீட்டில் வன்முறைக் கும்பல் மீண்டும் தாக்குதல்

**செல்லமாக வளர்த்த கிளியையும் வெட்டி வீசி அடாவடி**

(அராலி)

வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோவின் வீட்டில் நேற்று மாலையும் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கத்துடன் தொடர்புடைய கட்சியின் பெயரைச் சொல்லி ஜிப்ரிக்கோவின் வீட்டின்மேல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. ம. ரவீஸ்வரன்

SLTS I

M.Ed (first class), B.A, PGDE (merit), NA.Dip.in (Sc)teach (merit), Dip. in Quantitative Research

04.03.2022 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (M.Ed) பட்டம் பெற்றுக்கொண்ட எமது கல்லூரி ஆசிரியர் திரு.ம.ரவீஸ்வரன் அவர்களை பாராட்டுவதோடு மேலும் பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம். (10517)

ஆசிரியர் கழகம்
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.


## போக்குவரத்து குற்றங்கள் தொடர்பான
# அபராதப் பத்திரங்களை வீடுகளுக்கு அனுப்பத்திட்டம்

(கொழும்பு)

நாட்டில் போக்குவரத்து குற்றங்கள் தொடர்பான அபராதப் பத்திரத்தை வீடுகளுக்கு அனுப்பும் முறைமையொன்றை பொலிஸ் சிசிரீவி பிரிவின் ஊடாக ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பன இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு நகர் முழுவதும் 33 சந்திகள் பொலிஸ் சிசிரீவி பிரிவினரால் கண்காணிப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா)


## காணி விற்பனைக்கு

ஊரெழு, பலாலி வீதி NK மண்டபத்திலிருந்து 3 நிமிட (நடை) தூரத்தில் நல்ல சூழலில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (10513)

077 147 1000

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியை

திருமதி
ஜெயகுமாரி தவச்செல்வம் (B.A)

அவர்கள் 05.03.2022 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப்பட்டம் பெற்றுக்கொண்டதை முன்னிட்டு அவரைப் பாடசாலைச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம். (C-3910)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை
கிளாலி, எழுதுமட்டுவாழ்.

கிளி/சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை - பேராலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations!



எமது பாடசாலையின் ஆசிரியை

திருமதி
மயூரா தயாபரன்

( B.A, Sp.Trd.Pri )


அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டத்தினை பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் கற்பித்தலுக்காக மேலும் கற்க எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். (C-3908)

பாடசாலைச் சமூகம்
கிளி/சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை,
பேராலை, பளை.


# மரண அறிவித்தல்

# கிட்டிணன் கோபாலன்

**தோற்றம் : 03.09.1945  மறைவு : 03.03.2022**



கூவில், புலோலி தென்மேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் கோபாலன் அவர்கள் கடந்த 03.03.2022 (வியாழக்கிழமை) அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டிணன் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற வீரகத்தி - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் தவமணி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சிவபாக்கியம், சிவப்பிரகாசம், லக்சுமி, சந்திரசேகரம், விஜயரட்ணம், நற்குணம் மற்றும் சற்குணம், மதிவதனி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கிருஷ்ணானந்தன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), கோபாலகிருஷ்ணன் (இலண்டன்), சிவாகிருஷ்ணன் (பிரான்ஸ்), கிருஷ்ணமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகதுர்க்கா (பிரான்ஸ்), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணசுபரதி (லண்டன்), கீர்த்திகா (பிரான்ஸ்), ரேகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜன், அனோஜினி, அஜந்தன், அருண்குமார், அபிராமி, அச்சுதன், அஜனி, அரவிந்தன், வைஷ்ணவி, வைஷாளி, வைஷ்ணி, ஆதிரிஜன், ஆதவன், றெமோஜன், கிருஷ்ணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.03.2022) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் (இலங்கை நேரப்படி) 1 Avenuedu Marechal Juin 95503 Gonnesse என்னும் இடத்தில் நடைபெற்று பிற்பகல் 4.30 மணியளவில் 95 rue Narcel Sembat 93430 Viille taneuse என்னும் முகவரியில் அமைந்துள்ள மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :-
கிருஷ்ணானந்தன் ( மகன் - பிரான்ஸ்) - 0033664785 4485
சிவாகிருஷ்ணன் ( மகன் - பிரான்ஸ்) - 0033060367 3374

கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி. 021 226 0045 (10518)

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகளை தடை செய்ய வேண்டும்

## பிரித்தானிய எம்.பி கோரிக்கை

(லண்டன்)

**இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளை தடை செய்வதற்கு பிரித்தானிய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரித்தானிய பாரா ளுமன்ற உறுப்பினர் விரேந்திர சர்மா வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கையில் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மற்றும் தற்போது இலங்கையில் தொடரும் சித்திர வதைகளிற்கும் இரா ணுவத்தளபதி சவேந்திர சில்வாவே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கடந்த வருடம் அமெரிக்கா பயணத்தடை விதித்தது போன்று பிரித்தானியாவும் தங்கள் மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகார சபையின் கீழ் தடை செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

மேலும் இந்த நடவடிக்கை பொறுப்புக்கூறல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கையாகவும் பாதிக்க ப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான பிரித்தானிய அரசாங்கத்தின் கடப்பாட்டினை உறுதிப்படுத்து வதாகவும் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

சவேந்திர சில்வா தொட ர்பான யுத்தகுற்ற ஆதாரங்கள் பிரித்தானிய வெளி விவகார அமைச்சுக்கு வழங்கப்பட் டுள்ள நிலையில் அவருக்கு தடா விதிப்பது குறித்து பிரித் தானியா தொடர்ந்தும் அவதா னம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இரத்தினபுரியில் பாரவூர்தி- மோ.சைக்கிள் மோதி விபத்து இரு இளைஞர்கள் பலி

(இரத்தினபுரி)

இரத்தினபுரி பகுதியில் பாரவூர்தி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன மோதி விப த்துக்குள்ளானதில் இளைஞர் கள் இருவர் உயிரிழந்த னர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணி த்த ஹோமாகம, கடுவலை ஆகிய பிரதேசங்களைச் சேர் ந்த 28 மற்றும் 27 வயதான இளைஞர்களே இவ்வாறு உயி ரிழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பாரவூர்தியின் சாரதியை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (நி)

# உலக சந்தையில் அதிகரிக்கும் தங்கத்தின் விலை

(வோஷிங்டன்)

உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை தற்போது 1,970 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

உக்ரைன் நெருக்கடி தங்கத்தின் விலை உயர்வுக்கு மிகவும் நெருக்கமான காரணி யாக உள்ளது.

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை விரைவில் 2,000 டொலரை தாண்டும் என ஆய் வாளர்கள் சுட்டிக்காட்டுகின்ற னர். (நி)

# இலங்கை அரசாங்கம் கோரிய கடனுக்கு கடும்நிபந்தனை விதித்த இந்தியா

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் கோரிய 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுக்கு இந்தியா கடுமையான நிபந்தனை களை விதித்துள்ளதாக அறிய முடிகின்றது. அந்நியச் செலா வணி மற்றும் கடனைத் திருப் பிச் செலுத்தும் நெருக்கடியிலி ருந்து நீண்ட கால மீட்சியை இலக்காகக் கொண்ட பொரு ளாதார நடவடிக்கைத் திட்ட த்தை சமர்ப்பிக்க இந்தியா கோரியுள்ளது.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கில் பொருளாதாரத் திட்ட ங்களைத் தொடங்குவதற் கான முன்னேற்பாட்டு பட்டியலை யும் இந்தியா கோரியுள்ளதாக அறிய முடிகின்றது.

அத்துடன் பலாலி விமான நிலையத்தை மீண்டும் திற ப்பது திருகோணமலை துறைமுக பாதுகாப்பு உள்ளி ட்ட கோரிக்கைகளை இந்தியா முன்வைத்துள்ள தாகத்தெரி விக்கப்பட்டுள்ளது. (நி)

# பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் நிறை வடைந்துள்ள நிலையில், இன்று முதல் 2021 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கை கள் ஆரம்பமாகின்றன.

இதனைத் தொடர்ந்து நாட ளாவிய ரீதியிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள பாடசாலை களுக்கு மாத்திரம் ஏப்ரல் 8 ஆம் திகதி விடுமுறை வழங்க ப்பட்டு 18 ஆம் திகதி பாடசா லைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறி வித்துள்ளது. (நி)

# அதிகாரப் பகிர்வு குறித்து

## இந்தியா விடுத்த அழைப்பை வரவேற்கின்றோம்

(கொழும்பு)



அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கான உறுதிமொழிக்கு அமைய, மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்து மாறு இலங்கை அரசாங்க த்தை வலியுறுத்தும் இந்தியா வின் அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற் றுள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கான அர்ப்பணிப்பிற்கு அமைவாக மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு இல ங்கை அரசாங்கத்தை நாங் கள் தொடர்ந்து வலியுறுத்து வோம் என ஜெனிவாவில் இந் தியா கூறியிருந்தது.

இலங்கையில் நல்லிண க்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படு த்துவது தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பான உரை யாடலின் போது இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே இதனை தெரி வித்தார்.

இந்நிலையில் அதிகாரப் பகிர்வு மற்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர் பாக இந்தியா விடுத்துள்ள அறிக்கை மற்றும் தொடர்ச்சி யான அழைப்புகளை தாம் வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள் ளார்.

நாட்டில் தமிழ் மக்கள் கண்ணியத்துடனும், சுயம ரியாதையுடனும், சமத்துவத் துடனும், நீதியுடனும் வாழ, 13வது திருத்தத்தை அமுல்ப டுத்துவது உட்பட அதிகாரப் பகிர்வை அவர்கள் அடைய வேண்டும் என இந்தியா தனது நிலைப்பாட்டை மீண் டும் அறிவித்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

3ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1961 – 01 – 15

இறப்பு 2019 – 03 – 07



அமரர். பத்மநாதன் வசந்தி
(கிச்சி அண்ணை)

அன்பின் சொல்லால் விளைந்த
எம் செல்ல மகளே
உன்னைப் பறி கொடுத்து
நாம் படும் பாட்டை நீ அறிவாயோ?
பேச்சில் கனிவு காட்டி

குணத்தில் தெய்வமாய் நின்றாயே
உன் செல்லச் சிரிப்பைக் காண
எம் கண்கள் தவம் கிடக்கிறது அம்மா
மறுபடி வந்துவிடு அம்மா எங்களிடம்

(10512)

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

உன் பிரிவால் வாடும்
தகப்பன்–பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் சுழலில் சிக்கி சுருண்டது இலங்கை அணி




இந்தியா அணியின் சுழற்பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 174 ஓட்டங்களுக்குள் இலங்கை அணி சுருண்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 574 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இரண்டாம் நாள் ஆட்ட நிறைவின்போது 4 விக்கெட்களை இழந்து 108 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இந்த நிலையில், 466 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த நிலையில்,நேற்று இலங்கை அணி போட்டியை ஆரம்பித்தது.

இருப்பினும் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து ஓட்டம் எதுவும் பெறாமல் வீரர்கள் ஆட்டமிழந்தனர். அவ்வணி சார்பாக பத்தும் நிசங்க ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் ரவீந்திர ஜடேஜா 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

இந்நிலையில் 400 ஓட்டங்கள் பின்னிலையில் இலங்கை அணி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடியது. அதிலும் தோல்வியைத் தழுவியது. (4-6)



**'நீலங்களின் சமர்'**

# இரண்டாவது சுற்று போட்டியிலும் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றி



நீலங்களின் சமர் சுற்றுப் போட்டி இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.

ஐயனார் விளையாட்டுக் கழகத்திற்கும் ஸ்ரார் பைட் விளையாட்டு கழகத்திற்கும் இடையில் குறித்த போட்டி இடம்பெற்றிருந்தது.

இதன்போது முதலில் துடு ப்பெடுத்தாடிய ஐயனார் விளையாட்டுக் கழகம் 32.02 ஓவர்களிற்கு முகம் கொடுத்து சகல விக்கெட்களையும் இழந்து 155 ஓட்டங்களை பெற் றுக்கொண்டது.

156 ரன்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரார் பைட் விளையாட்டுக் கழகம் 28.02 ஓவர்களிற்கு மாத்திரம் முகம் கொடுத்து 79 ரன்களிற்கு தனது சகல விக்கெட்களையும் இழந்து தோல்வியை தழுவிக் கொண்டது.

நீலங்களின் சமர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இரண்டு வெற்றிகளை பெற்று ஐயனார் விளையாட்டுக் கழகம் புள்ளி பட்டியலில் முதல் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் கந்தசாமி

**(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு இணைப்பாளர் - யாழ்.மாவட்டச் செயலகம், கச்சேரி)**

**தோற்றம்** 1940.01.12 **மறைவு** 2022.03.05

V.H.லேன், இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தசாமி கடந்த 05.03.2022 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சோதிமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி, சோமசுந்தரம், புவனேஸ்வரி மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோதிலிங்கம் (ராஜன் - சுவிஸ்), கணேசலிங்கம் (மோகன் - ஜேர்மன்), அருணலிங்கம் (றஞ்சன் - சுவிஸ்), திருத்தணிகலிங்கம் (சந்திரன் -ஜேர்மன்), கௌரி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோசினி (சுவிஸ்), குகா (ஜேர்மன்), வசந்தி (சுவிஸ்), தர்சினி (ஜேர்மன்), செல்வன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிறோஸ், டினேஸ், ஆகாஸ், அபிஸா, அனுசா (சுவிஸ்), சாருயன், அனிக்கா, றெபேக்கா, றேனிக்கா, றேகினா, தர்சனா, நிலாந்தன், ரொபியாஸ் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.03.2022) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு, செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
V.H.லேன்,
இருபாலை.

(C-3909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 லட்சம் மதிப்புள்ள ஏலக்காய் மூடைகள் பறிமுதல்

(சென்னை)

இந்தியாவின் தூத்துக் குடியில் இரு ந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.10 இலட்சம் மதிப்புள்ள ஏலக்காய் மூடை களை நேற்று முன்தினம் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடியில் இருந்து இல ங்கை உள்ளிட்ட வெளிநாடு களுக்கு போதைப் பொருட்கள் கடத்தலை தடுக்க கியூ பிரான்ச் போலீசார் மாவ ட்டம் முழுவதும் கடற்கரையில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்ற னர்.

இதன் போது கடற்கரை அருகே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருந்த 2 படகுகளில் சோதனையிட்ட போது மொத்தம் 14 மூடை களில் 550 கிலோ ஏலக்காய் இருப்பதை கண்டுபிடித்து பறி முதல் செய்தனர்.இதன் மதி ப்பு ரூ.10லட்சம் என்று கூறப்படுகிறது. மேலும் அவ ர்களை பொலிசார் தேடி வருகின்றமை குறிப்பிடதக்கது. (நி)


# 1ம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
09.08.1951
ஆண்டவன் பாதத்தில்
16.02.2021

**நாராயணசுவாமி மோகனதாஸ்** (மோகன்)

(திதி-07.03.2022)



குடும்பத்தின் குத்து விளக்கே
ஆருயிர்த் துணைவனே
பாசமுள்ள உடன்பிறப்பே
அருமை மைத்துனனே
ஆசை மாமாவே
அன்பான சித்தப்பாவே-
எங்களை மறந்து
எங்கே போனீர்கள்
ஆண்டு ஒன்று என்ன ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
ஆறுமோ எம் துயர்
நாம் கூவி அழைக்கும்
குரல் கேட்குதா?
எழுதப்பட்ட விதியை
இறைவனாலோ
நாம் அழுத கண்ணீராலோ
அழித்தெழுத முடியாதே
நீங்கள் இறைவன் திருவடியில்
நிம்மதியாய்த் தூங்க எங்கள்
கண்ணீர் பூக்களால் அஞ்சலிக்கின்றோம்.

34, கள்ளி வீதி,
வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை

(சி-3903)

குடும்பத்தினர்.


# 7 நாட்களின் பின்னர் உயிரிழந்தால் கொவிட் மரணமாக கருதப்படாது

(கொழும்பு)

**புதிய சுகாதார வழிகாட்டலுக்கு அமைய கொவிட்-19 தொற்று உறுதியாகி 7 நாட்களுக்கு பின்னர் மரணிப்போரது மரணம் கொவிட்-19 மரணமாக கருதப்படாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் வெளியிட்ட புதிய சுகாதார வழிகாட்டலில் இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.இதற்கமைய குறித்த மரணங்களின் இறுதி கிரியைகளை தனிமைப்படுத்தல் விதிகளில் இன்றி சாதாரண முறையில் முன்னெடுக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொவிட்-19 தொற்றால் மரணிப்போரின் உடல்களை அடக்கம் செய்யும் நடவடிக்கை அரசாங்கத்தி னூடாக மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். (நி)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு எதிராக ஜனாதிபதி இல்லத்திற்கு முன் திரண்ட ஐக்கிய மக்கள் சக்தி மகளிர் அணி



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஹிரு ணிகா பிரேமசந்திர தலைமையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தி யாவசியப் பொருட்களின் பற்றாக்குறை உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி மிரிஹானவிலும் ஜனாதிபதியின் இல்லத்திற்கு முன் னாலும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

# இராசிபலன்

07.03.2022
மாசி 23, திங்கட்கிழமை
பஞ்சமி பின்னிரவு 12.45 மணிவரை

பரணி முழுவதும்
சுபநேரம் -12.25-1.55 மணிவரை
இராகுகாலம் -7.55-9.25 மணிவரை

சந்திராஷ்டமம்-
அத்தம்

**வளவன்**

**மேஷம்** — ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர்.

**கடகம்** — நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள்,கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**துலாம்** — நண்பர்கள் வழியில் நன்மைகள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** — இயல்பான வாழ்க்கையின் இன்பங்கள் கூடும் நாள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** — பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்,வெளியூர்த் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விரயங்கள் கூடும் நாள்.

**சிம்மம்** — எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்,அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்** — வீண் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்,உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மிதுனம்** — விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**கன்னி** — தொழிலில் மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, மனதில்இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

**தனுசு** — எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள்,உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு,மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**மீனம்** — வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

உயர்வாகக் கருதினால் உயர்ந்திட முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி பேதங்களை கடந்து அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும்

## யாழ்.மாநகர பிரதி முதல்வர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்காக இன்னும் ஒருவருடம் சபை நீடிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் இருந்தாலும் கூட அதற்கான அபிவிருத்தியினை செய்வதற்கான அந்த சூழ் நிலைகள் உருவாகுமா என்ற கேள்விக் குறி இப்போதும் இருக்கின்றது என யாழ் மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட நாயன்மார் கட்டு குள அபிவிருத்திகள் இடம் பெறும் நிலையில் புனர்நிர்மானம் செய்யப்படாத நிலையில் உள்ள வடிகாலமைப்பினை மறுசீரமைக்கும் அபிவிருத்தியினை முன்னெடுக்கும் வகையில் அங்குராப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று நாயன்மார்கட்டு செவிப்புல பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் மாநகரசபை உறுப்பினர் திருமதி மதிவதனி தலைமையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் கலந்துகொண்டு புனர்நிர்மானம் செய்யப்படாத நிலையில் உள்ள வடிகாலமைப்பினை அங்குராப்பணம் செய்துவைத்து கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்கின்ற செயலை தற்போது சிலா் செய்து வருகின்றனர். இது அரசியல் நாகரீகம் அற்ற செயல் என்று பதிவு செய்ய விரும்புகின்றேன். கட்சி பேதங்களை கடந்து ஒன்று சேர்ந்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் அதுதான் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என மேலும் தெரிவித்தார்.(4-6-104)

# மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது

(அராலி)

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளி சந்தியில் வைத்து 50 கால் சாராய போத்தல்களுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

நெல்லியடி உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி உதயானந்தன் தலைமையில் கீழ் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களது குழுவினரால் இக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது வரணியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர், நீண்ட காலமாக தான் இவ்வாறு சாராயம் விற்பனை செய்வதாக வாக்குமூலம் வழங்கியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-104)

# வட்டுக்கோட்டையில் விபத்து இருவர் படுகாயம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாமடைந்தனர்.

கார் ஒன்றினை முந்திச் சென்ற வேளை எதிரே வந்த பேருந்துடன் மோதியே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த அராலியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பேருந்தின் சாரதி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# நாட்டில் நிலவிய சீமெந்து தட்டுப்பாடே கொங்கிறீட் வீதிகள் போடாமைக்கு காரணம்

## அங்கஜன் எம்.பி சுட்டிக்காட்டு



(சாவகச்சேரி)

வருட இறுதியில் நாட்டிலுள்ள சந்தைகளில் நிலவிய சீமெந்துத் தட்டுப்பாடே கொங்கிறீட் வீதிகள் போடப்படாமைக்கு காரணம் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் கொங்கிறீட் வீதித்திட்டம் தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கிராமங்களிற்கான கொங்கிறீட் வீதிகள் அமைக்கும் திட்டம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக கடந்த ஒக்டோபர் மாதத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்டது.

அந்த திட்டம் வரும் போது சந்தையில் சீமெந்திற்கு தட்டுப்பாடு நிலவியது.


கடந்த காலங்களில் ஒரு வருடத்திற்கான வேலைத்திட்டம் நிறைவடையாவிட்டால் அடுத்த வருட தொடக்கத்தில் வேலைத்திட்டத்தை நிறைவு செய்துவிட்டு வேலைத்திட்டத்திற்கான பணத்தை பெற முடியும். ஆனால் தற்போது நிதியமைச்சர் அந்தந்த ஆண்டுகளுக்கான வேலைத்திட்டங்களை அதே ஆண்டிற்குள் முடிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் கொங்கிறீட் வீதிகள் போடாமல் விடப்பட்டாலும் வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் நிதியில் அதே வீதிகள் அனைத்தும் தார் வீதியாக செப்பனிடப்படும். தார் வீதியாக அமைப்பதால் சீமெந்து பிரச்சனை இருக்காது.

கொங்கிறீட் வீதிகள் யாழ் மாவட்டத்தில் பத்து வீதிகள் ஏற்கனவே போடப்பட்டு விட்டன. யாழ் மாவட்டத்தை விட மற்ற மாவட்டங்களின் நிலை மோசமாக உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு வீதிகளே கொடுக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்தகாரர்கள், பொது அமைப்புக்கள் சீமெந்து தட்டுப்பாடு காரணமாக ஒப்பந்தம் செய்யவே முன்வரவில்லை என மேலும் அவர் தெரிவித்தார். (4-6-30)



இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் "சித்திரங்களின் மூலம் இயற்கை" என்னும் தலைப்பில் சித்திர போட்டி நடைபெற்றது. யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்ற முன்தினம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. (படம் :- சிவசாந்தன்)



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியின் அகலிப்பு பணிகளில் முதற்கட்டமாக குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. குறித்த பணிகளை யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். (படம்:- ரவிசாந்)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வு



(முறிகண்டி)

வியர்வைதுளிகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வு "பெண் தொழிலாளர்களைப் பாதுகாத்திடுங்கள், சி 190 சமவாயத்தை ஏற்படுத்துங்கள்" எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் கொண்டாடப்பட்டது.

இதன்போது குறித்த விடயத்தை வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட பெண்கள், கவனயீர்ப்பு ஊர்வலமாக பாரதி ஸ்ரார் தனியார் மண்டபம் வரை சென்றனர். (4-6-100)

# கரியாலை நாகபடுவான் வீதி புனரமைப்பு ஆரம்பம்

(அக்கராயன்)

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் வீதி நிரந்தரமாக புனரமைக்கப்பட உள்ளது என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை கவனத்தில் கொண்டு குறித்த வீதியினை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 9.8 மில்லியன் ரூபாய் செலவில் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒருபகுதி வேலைகள் LDSP வேலைத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. மிகுதி வேலைகள் தற்போது நடைபெறுகின்றன.

இவ்வீதி புனரமைப்பின் மூலம் கரியாலைநாகபடுவான் கிராம மக்கள் முழங்காவில் நகரம் உட்பட ஏனைய பகுதிகளுக்கு இலகுவாக பயணிக்க முடியும் எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பால் உலக பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும்

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பும் அதன் விளைவாக ரஷ்யா மீது விதிக்கப்படும் பொருளாதாரத் தடைகளும் உலகப் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

எரிசக்தி மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்வினால் ஏற்கனவே உலகில் வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட பொருளாதாரச் சேதம் மிகப் பெரியது.

ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள ஸ்விஃப்ட் நாணய பரிமாற்றத் தடை உள்ளிட்ட பொருளாதாரத் தடைகள் உலகப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதேவேளை, போர் காரணமாக ஏற்கனவே உலக சந்தையில் ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 120 டொலர்களை நெருங்கியுள்ள நிலையில், விரைவில் அது 150 டொலர்களாக உயரும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

## 78 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு தடை

(கொழும்பு)

78 கோடி ரூபா பெறுமதியான சட்டவிரோத சொத்துக்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக பணம் சம்பாதித்த 1,100 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் 3 மாதங்களுக்குள் வெளியிட எதிர்பார்ப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிவடைந்துள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் 3 மாதங்களுக்குள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த நடவடிக்கைகள் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், கல்வி பொதுத் தராதர உயர் தரப்பரீட்சைக்கான பெறுபேறுகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 8 ¾ சூரி, செவ் 4 இல்
உயரம் :5'6"
தகைமை/தொழில்: BSc Engineering வியாபாரம்
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/12382

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 52 சூரி, செவ் 1 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: முகாமையாளர் (லண்டன்)
எதிர்பார்ப்பு : உள்நாடு. வெளிநாடு
தொ.இ: B/12390

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா : 40 சூரி 9 செவ் 2 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: அலுமினிய பிற்றிங்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12392

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 9 ¾ சூரி, செவ் 3 இல்
உயரம்: 5'9"
தகைமை/ தொழில்: அழகுமாடம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12393

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: 44 சூரி 10 செவ் 8 இல் உயரம்:5'
தகைமை/தொழில்:H.N.D.A பட்டாரி (லண்டன்)
எதிர்பார்ப்பு:விவாகரத்தான லண்டனிலுள்ள PR உள்ள மணமகன் விரும்பத்தக்கது
தொ.இ:G/12444

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா: 43 ¾ சூரி 11 செவ் 1 இல் உயரம்: 152 cm
தகைமை/தொழில்: BSc (Hons) Agriculture பட்டதாரி
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது உள்நாடு ஆயின் அரச உத்தியோகம்
தொ.இ:G/12445

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 57 ¼ உயரம்: 151 cm
தகைமை/தொழில்: underGraduate (Student of Jaffna university unit of siddha Medicine
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது உள்நாடு ஆயின் அரச உத்தியோகம்
தொ.இ:G/12446

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 51 ¾ சூரி, செவ் 4 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MBA DO
எதிர்பார்ப்பு: அரச.தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12448

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## அரசாங்கத்திற்கு எதிராக தீப்பந்தப் போராட்டம்



(தலவாக்கல)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதைச் சுட்டிக் காட்டியும் உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியும் தலவாக்கலையில் தீப்பந்த போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தலவாக்கலை நகரில் நேற்று முன்தினம் இரவு ஏழு மணிக்கு இடம்பெற்றுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் மக்களின் வாழ்வாதாரம் படும் மோசம், உரம் இல்லாததால் தேயிலை பயிர் செய்கை பாதிப்பு, 24 மணி நேரம் மின்சாரம் கொடுக்க முடியாத அரசாங்கம் வீட்டுக்கு போ, எரிபொருள் தட்டுப்பாடு மக்கள் நீண்ட வரிசையில் என அரசாங்கத்திற்கு எதிரான கோசங்களை எழுப்பி, போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

## ஏப்ரலுக்கு முன் பூஸ்ரர் பெற்றுக் கொள்ளுங்கள்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மீண்டும் பொது மக்களுக்கு அறிவிப்பு விடுத்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் பொது இடங்களில் முழுமையான தடுப்பூசி செலுத்தப்பட்டமைக்கான அட்டையை கைவசம் வைத்திருத்தல் அவசியமாகும்.

இதன்காரணமாக அதற்கு முன்னர் செயலூக்கி தடுப்பூசியை பெற்று முழுமையான தடுப்பூசியை பெற்ற அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வான் பரப்பில் தடை விதித்தால் எதிரியாக கருதப்படுவர்

## நேட்டோ நாடுகளுக்கு புடின் எச்சரிக்கை!

(மொஸ்கோ)

உக்ரைன் வான்பரப்பில் விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிப்பவர்கள் ரஷ்யாவுடன் மோதுபவர்களாக கருதப்படுவர் என்று ஜனாதிபதி புடின் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்ய விமானப்படையின் பெண்கள் பிரிவினர் இடையே நேற்று பேசிய புடின், உக்ரைன் வான்பரப்பை விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கும் 3 ஆம் தரப்பினர் (நேட்டோ) இந்த ஆயுத சண்டையில் பங்கேற்கேற்பவர்களாக ரஷ்யாவால் கருதப்படுவர்.

நமது பாதுகாப்பு படையினருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் எவரேனும் அந்த நடவடிக்கையை (வான் பரப்பு தடை) மேற்கொள்ளும் பட்சத்தில், அவர்கள் எந்த அமைப்பில் (நேட்டோ) உறுப்பினர்களாக இருந்தாலும் அந்த நொடியே அவர்கள் (நேட்டோ) இந்த இராணுவ சண்டையில் பங்கேற்பவர்களாக ரஷ்யாவால் கருதப்படுவர் என எச்சரிக்கை விடுத்தார்.

ரஷ்ய ஜனாதிபதி புடினின் இந்த பேச்சு உக்ரைன் விவகாரத்தில் நேட்டோ தலையிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று கூறும் பகிரங்க எச்சரிக்கையாக கருதப்படுகிறது. (நி)

## எவரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்

## இந்திய மாணவர்களுக்கு தூதரகம் எச்சரிக்கை



(டில்லி)

இந்தியத் தூதரகம் அழைப்புவிடுக்கும் வரை உக்ரைனில் உள்ள இந்திய மாணவர்கள் எவரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என மத்திய வெளிவிவகார அமைச்சு எச்சரித்துள்ளது.

சுமி நகரில் சுமார் 700 மாணவர்கள் சிக்கியுள்ள நிலையில். வாகன வசதி கிடைக்காததால் அவர்கள் நடந்தே நாட்டின் எல்லை வரை செல்ல முடிவெடுத்து ஒரு குழுவாக சென்றுள்ளனர்.

இது தொடர்பாக படங்கள் வெளியான நிலையில் குண்டுகள் பொழியும் சூழலில் மாணவர்கள் உயிரைப் பணயம் வைக்க வேண்டாம் என்றும் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுமாறும் இந்திய தூதரகம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களுடன் தூதரகங்கள் மூலம் தொடர்பு கொண்டு வருவதாகவும் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் வரை வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்றும் மத்திய வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (நி)

## 15 நாட்களில் உக்ரைனை பிடிக்க திட்டம் தீட்டிய ரஷ்யா

## இரகசிய ஆவணங்கள் அம்பலம்

(மொஸ்கோ)

15 நாட்களுக்குள் உக்ரைன் முழுவதையும் பிடிக்க ரஷ்யா திட்டமிட்டிருந்தது இரகசிய ஆவணங்கள் மூலம் அம்பலமாகியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து பத்து நாட்களை கடந்துள்ளது. கெர்சன் நகரை கைப்பற்றிய ரஷ்ய படைகளுக்கு தலைநகர் கீவை கைப்பற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால் உக்ரைன் படைகளுக்கும் ரஷ்ய படைகளுக்கும் துப்பாக்கி சண்டை நடக்கிறது.

உக்ரைன் தரப்பில் பாதுகாப்பு படையினர் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, மீட்பு பணிக்காக உக்ரைனின் 2 நகரங்களில் தற்காலிக போர் நிறுத்தம் செய்யப்படுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்நிலையில் உக்ரைன் மீது போர் தொடுப்பது தொடர்பாக ரஷ்யாவின் திட்டங்களுக்கு எப்போது அனுமதி வழங்கப்பட்டது என்ற தகவல் இரகசிய ஆவணங்கள் மூலம் வெளியாகியுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கான திட்டங்கள் ஜனவரி 18 அன்று அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. பெப்ரவரி 20 முதல் மார்ச் 6 ஆம் திகதி வரை 15 நாட்களுக்குள் உக்ரைனை பிடிக்கும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் ரஷ்யாவின் இரகசிய போர் ஆவணம் ஒன்றில் கூறப்பட்டு உள்ளது. (நி)

## அணு ஆயுதங்களை உக்ரைன் உருவாக்குகிறது

### புடின் பரபரப்பு குற்றச்சாட்டு

(மொஸ்கோ)

புளூட்டோனியத்தை அடிப்படையாகக் கொண்ட அணு ஆயுதத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை உக்ரைன் முன்னெடுத்து வருவதாக ரஷ்ய ஊடகங்கள் நேற்று குற்றஞ்சாட்டியுள்ளன.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை உறுதி செய்வதற்கான ஆதாரங்கள் எதனையும் அந்த ஊடகங்கள் வெளிப்படுத்தவில்லை.

சோவியத் அறிவை பயன்படுத்தி அணு ஆயுதங்களை உக்ரைன் உருவாக்குகிறது என உக்ரைன் மீதான படையெடுப்புக்கு உத்தரவிட சற்று முன்பாக ரஷ்ய ஜனாதிபதி புடின் குற்றஞ்சாட்டியிருந்தார். இது ரஷ்யா மீதான தாக்குதலுக்கு தயார் செய்வதற்கு சமம் என்றும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 3 அ...

## ரஷ்ய...



இன்று திங்கட்கிழமை இந்த மூன்றாம் சுற்று பேச்சு வார்த்தை இடம்பெறவுள்ளதாக உக்ரேனிய ...

## உக்ரைனியர்களுக்கு... முதல் நாளில் 55 மி...

(கீவ்)

உக்ரைனில் இருந்து வெளியேறும் ஆயிரக்கணக் கான உக்ரைனியர்களுக்கு உதவுமாறு பிரித்தானிய பேரிடர் அவசரக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்டுவரும் நிதி திரட்டும் ...

## மனநல மருத்துவமனை ரஷ்ய படையினர் வசம்

## பிணைக்கைதிகளாக 670 நோயாளிகள்

(கீவ்)

உக்ரைனின் கீவ் மாகாணத்தில் உள்ள ஒரு மனநல மருத்துமனையை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ளன.

இதில் 670 நோயாளிகள் பிணைக் கைதிகளாக சிக்கியுள்ளதாக மாகாண ஆளுநர் குலேபா தெரிவித்துள்ளார்.

அவர்களை அங்கிருந்து எப்படி வெளியேற்றவது என்று தெரியவில்லை என்றும் மருத்துவமனையில் மருந்துகள், குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில நோயாளிகள் பல ஆண்டுகளாக படுக்கையில் இருந்து எழ முடியாதவர்கள், தனி கவனம் தேவைப்படுகிறவர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...றும் சுற்று பேச்சுக்கு
# ...ஷ்யா-உக்ரைன் தயார்



(கீவ்)

**போரை முடிவுக்குக்கொண்டு வருவது குறித்து ரஷ்யாவும் உக்ரைனும் மூன்றாவது சுற்று பேச்சுவார்த்தையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன.**



பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி பேச்சுவார்த்தைகளை ஊக்குவிப்பதாக சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே நெருக்கடியை தீர்க்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அமெரிக்கா, நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவுடன் நியாயமான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்றும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் விரிவாக்கம் குறித்து மொஸ்கோவின் பாது காப்பு தொடர்பான கவலைகளை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (நி)

## ...ளுக்கு ஆதரவாக நிதி திரட்டும் திட்டம் 55 மில்லியன் பவுண்ஸ் நன்கொடை

திட்டத்தின் முதல் நாளில் 55 மில்லியன் பவுண்ஸ் திரட்டப்பட்டுள்ளது.

இந்த நன்கொடையில், ராணி, வேல்ஸ் இளவரசர் மற்றும் கேம்பிரிட்ஜ் டியூக் ஆகியோரின் நன்கொடைகளும் அடங்கும் எனப் பிரித்தானிய பேரிடர் அவசரக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தொடங்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே லட்சக்கணக்கான மக்கள் மனிதாபிமான முயற்சிக்கு நன்கொடை அளித்தனர். (நி)

## ரஷ்யாவில் சேவையை நிறுத்தியது விசா, மாஸ்டர்கார்டு நிறுவனங்கள்

(மொஸ்கோ)

ரஷ்ய வங்கிகளால் வழங்கப்படும் கார்டுகள் இனி மாஸ்டர்கார்டு நெட்வொர்க்கால் ஆதரிக்கப்படாது என மாஸ்டர்கார்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்து 10 நாட்கள் கடந்து விட்டன. இந்த 10 நாளில் அந்நாட்டின் முக்கிய நகரங்கள் மீது ஏவுகணை வீச்சு, வான்தாக்குதல், பீரங்கி தாக்குதல் என நடத்தி உக்ரைனை உருக்குலைய வைத்து வருகிறது ரஷ்யா. அதே நேரம் உக்ரைனும் ஈடுகொடுத்து போராடி வருகிறது.

இந்நிலையில் ரஷ்யாவில் வரவிருக்கும் நாட்களில் விசா கார்டு பரிவர்த்தனைகள் துண்டிக்கப்படும் எனவும் விசா கார்டுகள் தடை செய்யப்பட்டவுடன் ரஷ்யாவில் வழங்கப்பட்ட கார்டுகள் வெளிநாட்டில் வேலை செய்யாது.

வெளிநாட்டில் வழங்கப்பட்ட கார்டுகள் ரஷ்யாவிற்குள் வேலை செய்யாது எனவும் விசா, மாஸ்டர் கார்டு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இதேபோல், உக்ரைன் மீதான ரஷ்ய போர் அதிர்ச்சியூட்டும் மற்றும் பேரழிவு தரக்கூடியது எனக்கூறிய மாஸ்டர்கார்டு, விசாவைப் போலவே மாஸ்டர்கார்டு தடையும் இருக்கும் என அறிவித்தது.

ரஷ்ய வங்கிகளால் வழங்கப்படும் கார்டுகள் இனி மாஸ்டர்கார்டு நெட்வொர்க்கால் ஆதரிக்கப்படாது. நாட்டிற்கு வெளியே வழங்கப்படும் எந்த மாஸ்டர்கார்டும் ரஷ்ய வணிகர்கள் அல்லது ஏ.டி.எம்.களில் வேலை செய்யாது என தெரிவித்துள்ளது. (நி)

## 'நான் எங்கும் ஒளிந்து ஓடவில்லை' வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்த ஜெலன்ஸ்கி

(கீவ்)

தான் நாட்டை விட்டு ஓடி விட்டதாக நொடிக்கு நொடி புரளி பரவி வருவதாகவும் யாரும் எங்கேயும் தப்பி ஓடவில்லை என்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்ய படைகள் உக்ரைன் மீது தீவிரமாக தாக்குதல் நடத்தி வரும் நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நாட்டைவிட்டு போலந்துக்கு தப்பி ஓடியதாக வதந்தி பரவியது. இதை அவர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைத்தளத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி இருக்கும் கீவ் நகரில் இரவு பகலாக ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (நி)

## போர் நிறுத்தத்தை மீறும் ரஷ்யா
### உக்ரைன் குற்றச்சாட்டு

(கீவ்)



4 லட்சம் பேர் ரஷ்ய படையினரால் பிணைக் கைதிகளாக வைக்கப் பட்டுள்ளதாக மரியுபோல் நகர மேயர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் மரியுபோல் மற்றும் வோல்னோவாகா நகரங்களில் இருந்து பொது மக்கள் வெளியேறுவதற்கு வசதியாக ரஷ்யா தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்தது.

இந்நிலையில் போர் நிறுத்ததை ரஷ்ய படைகள் மீறுவதாகவும், மனிதாபிமான [illegible] பொதுமக்கள் வெளியேறுவதற்கான பாதுகாப்பு பாதை அமைப்பது மறுக்கப் படுவதாகவும் மரியுபோல் நகர மேயர் வாடிம் பாய்சென்கோ குற்றம் சாட்டியுள்ளார்.

அந்த நகரம் முழுவதும் தண்ணீர் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 4 லட்சம் நகரவாசிகள் ரஷ்ய படையினரால் பிணைக் கைதிகளாக வைக்கப் பட்டுள்ளனர் என்றும், திகீவ் இன்டிபெண்டன்ட் நாளிதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் 300 ஏக்கர் காடு சட்ட விரோதமாக அழிப்பு



(கண்டாவளை )

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலைப்பாணி கிராமத்தில் சுமார் 300 ஏக்கருக்கும் மேற்பட்ட காடுகள் வெளியிடங்களைச் சேர்ந்த நபர்களால் சட்ட விரோதமாக துப்பரவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலைப் பாணி பிரதேசத்தில் 54 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு வாழ்ந்து வரும் குடும்பங்களில் 14 குடும்பங்களுக்கு மாத்திரமே தாலா இரண்டு ஏக்கருக்கும் குறைவான வயல் காணிகள் உள்ளன. ஏனைய குடும்பங்கள் வயல் காணிகள் எதுவும் இல்லாது கடந்த பல ஆண்டுகளாக தமது வாழ்வாதாரத்திற்காக பெரும் கஷ்டங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த பிரதேசத்தில் அவர்களுக்கான வயல் காணிகளை வழங்க கூடிய வகையில் அரச காணிகள் காணப்படுகின்ற போதும் அவற்றை வழங்க உரிய அதிகாரிகள் இது வரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையென பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வாரம் முதல் குறித்த கிராமத்தில் சுமார் 35 ஏக்கருக்கும் மேற்பட்ட காடுகள் கனரக வாகனங்கள் மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமும் குறித்த பகுதியில் காடழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு குறித்த கிராமத்தில் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு சட்ட விரோதமாக வெளியிடங்களை சேர்ந்த நபர்களால் பெருமளவான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். (4-315)



# மகளிர் தினத்தை புறக்கணித்து மாபெரும் போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(பனிக்கன்குளம்)

ஐந்து ஆண்டுகள் தொடர் போராட்டத்தை நிறைவு செய்து ஆறாவது ஆண்டாக போராட்டம் தொடர்கின்ற நிலையில் இன்று வரை தங்களுக்கான எந்தவிதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து நாளை 8 ஆம் திகதி மகளிர் தினத்தை புறக்கணித்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத் தலைவி தெரிவித்துள்ளார்.

இப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாத்திரமன்றி மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், வர்த்தக சங்கங்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சிவில் அமைப்புக்கள், சமூக நலன் விரும்பிகள் என அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து தங்களுடைய உறவுகளை மீட்பதற்கான இந்த போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (4-6-281)

# 13 ஐ தீர்வாக ஏற்றுக்கொள்வது எம்மை நாமே அழிப்பதற்கு சமன்

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(கண்டாவளை )

தமிழர்களுக்கேயான தனித்துவமான மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரம், உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் எங்களுடைய தேசம் அங்கிகரிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு-மல்லாவி நகரில் அமைந்துள்ள துணுக்காய் பாண்டியன்குளம் தொழில்நுட்ப கலை கலாச்சார மற்றும் பெண்கள் மேம்பாட்டு மையத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எங்களிடம் ஒரு நடைமுறை அரசு இருந்தது அங்கே அனைத்தையும் நாங்கள் கண்டோம் எங்களை நாங்களே ஆட்சி செய்தோம் அந்த ஆட்சிக்கு புலம்பெயர் தேசத்து மக்கள் தான் முழுப் பங்களிப்பையும் செய்தார்கள்.

முள்ளி வாய்க்காலில் அழிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிதைந்துபோன எங்கள் தேசத்தை கட்டியெழுப்பி மீண்டும் ஒரு தேசமாக்குவதற்கும் அனைவரது பங்களிப்பும் மிக முக்கியமாகவுள்ளது

எங்களுக்கான தேசம் அங்கிகரிக்கப்படுகின்ற போது தான் அந்த தேசத்தில் தனித்துவமான எங்களது மொழி, கலை கலாசாரங்கள், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்க முடியும்.

13 ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபைகள் என்பது எங்களது மண்ணில் முப்பத்தி நான்கு ஆண்டுகளாக இருக்கின்ற இறந்து போன ஒரு எலும்புக் கூடாகவே பார்க்கப்படுகின்றது. அதை நாங்கள் ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்வோமாக இருந்தால் இது எங்களை நாங்களே அழித்துக் கொள்வதற்கும் எங்களை நாங்கள் பெரும்பான்மை இனத்தினுடய அடிமைகளாக ஆக்குவதற்கும் வாய்ப்பாக மாறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-315)



தென்னிந்திய கலைஞரும் சிறந்த நடன ஆசிரியருமான கலா மாஸ்டர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கலைஞர்களை சந்திக்கும் நோக்கில் குறித்த மாவட்டத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். (படம்:தவசீலன்)

# மின் ஒழுக்கால் பெறுமதிமிக்க பொருட்கள் எரிந்து நாசம்



(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் உள்ள வீட்டில் நேற்றைய தினம் வீட்டு உரிமையாளர் இல்லாத சமயம் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக வீட்டிலிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.


முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 420 | 400 | 450 | 500 |
| தக்காளி | 250 | 220 | 260 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 250 | 350 | 400 | 400 |
| பூசணி | 140 | 130 | 140 | 140 |
| புடோல் | 250 | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 110 | 180 | 200 |
| பெரிய் வெங்காயம் | 140 | 120 | 140 | 180 |
| பாகற்காய் | 350 | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 220 | 160 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 250 |
| லீக்ஸ் | 200 | 120 | 160 | 180 |
| பீற்றூட் | 160 | 140 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 260 | 160 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 180 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 80 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 170 | 160 | 160 | 160 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 200 | 240 |
| முள்ளங்கி | 50 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 80 | 40 | 40 |
| ஈரப்பலா | -- | -- | 120 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காலிங்கராயன் அமைத்த திருக்காமக்கோட்டம்



பேராசிரியர் சி.பத்மநாதன்,
தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**கோமரங்கடவலக் கல்வெட்டில் அதிசயமானவரலாற்றுச் செய்திகள்**

ஒரு வரலாற்று ஆவணம் என்ற வகையில் மிக அண்மையிலே திருகோணமலை மாவட்டத்தில் கோமரங்கடவல என்னும் ஊரில் அடையாளங் காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டு மிகுந்த சிறப்புடையது பல விடயங்களைப் பற்றிய அதிசயமான விபரங்கள் அதில் அடங்கியுள்ளன. அது காலிங்கராயன் என்னும் பிரதானியின் கல்வெட்டு. அவன் சொன்ன வாசகத்தை அதிலே பதிவு செய்துள்ளனர். விபரங்களைக் கூறுமிடத்து அவன் தன்னைக் குலோத்துங்கசோழ காலிங்கராயனேன் என்றும் எமக்குப் பிராப்தமாய் காலிங்கராயப் பற்று என்று தனது ஆழ்புலத்தையும் குறிப்பிடுகின்றமை கவனிக்கப்பட வேண்டியது. இக்கல்வெட்டு ஒரு சக்தி பீடம் உருவாக்கப்பட்டமை பற்றியது கல்வெட்டு வாசகத்தின் தொடக்கமான சமஸ்கிருத சுலோகத்திலுள்ள சக்தி பீடாம் கரோத் என்ற தொடரினால் இது உணரப்படும். சக்திபீடம் என்பது அம்மன் கோயில். காலிங்கராயன் அமைப்பித்த சக்திபீடமான திருக்காமக்கோட்டம் பற்றிய விபரங்கள் இக்கல்வெட்டிலே பதிவாகியுள்ளன.



கோமரங்கடவலவிற் கிடைத்த கல்வெட்டு இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகளில் முதன்மையானது அதில் மேல்வரும் விடயங்கள் பற்றிய புதுமையான வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன.

1. பொலன்னறுவையில் நெடுங்காலமாக நடைபெற்ற அரசுரிமை போட்டிகளில் சோழர் ஏற்படுத்திய செல்வாக்கு.

2. விஜயபாகு என்னும் பெயருடைய காலிங்க மாகன் சோழப்படைகளின் ஆதரவோடு பொலன்னறுவை இராசதானியில் அரச பதவி பெற்றமை.

3. திருகோணமலைப் பிரதேச வரலாறு.

4. திருக்கோணமலையில் அமைந்த திருக்காமக்கோட்டம்.

இந்நான்கு விடயங்களில் இறுதியான இரண்டுமே இங்கு விளக்கப்படுகின்றன. அவை இரண்டும் திருகோணமலைத் தமிழர் வரலாறு, திருக்கோணமலைத் தல வரலாறு என்பன பற்றியவை. முன்னைய இரண்டும் பொலன்னறுவை இராசதானியின் வரலாறு பற்றியவை. அவற்றைப் பற்றிய எமது பரிசீலனை வேறோரிடத்தில் இடம்பெறும்.

சக்திபீடம் பற்றிய காலிங்கராயனது கல்வெட்டிலே புறத்தோற்றத்திற் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அதன் இடப்புறத்தில் எழுத்துக்கள் சிலவிடயங்களில் மிகத்தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் அவற்றிலே சிதைவுகள் ஏற்படவில்லை. ஆனால் எழுத்துகள் மங்கலாகிவிட்டன. வாசகம் எழுதிய பாறைப் பகுதியின் நடுவில் இடப்புறமான பகுதி சற்றுப் பள்ளமாக உள்ளது. அதிலுள்ள எழுத்துகளையும் சற்றுச் சிறியனவாக வெட்டியுள்ளனர். மேலும் அதிலே மழைநீர் மிகுதியாக ஓடியமையால் கல்லில் ஏற்பட்ட அரிப்பினால் எழுத்துகள் தேய்வடைந்துள்ளன.

இந்தக் கல்வெட்டின் புகைப்படப் பிரதிகளைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் எமக்கும் பேராசிரியர் எ.சுப்பராயலுவுக்கும் வேறு சிலருக்கும் அனுப்பியுள்ளார். அந்தப் படங்களை ஆதாரமாகக் கொண்டு கல்வெட்டின் வாசகத்தை இயலுமானவரையிற் சிறப்பாகச் சுப்பராயலு உருவாக்கினார். புஸ்பரட்ணம் மூலமாக அந்த வாசகம் எமக்குக் கிடைத்தது. டாக்டர் ஜீவராஜ் எமக்கு அனுப்பி வைத்த புகைப்படங்களின் அடிப்படையில் அந்த வாசகத்தைப் பரிசீலனை செய்ய முடிந்தது.

**கல்வெட்டிலுள்ள திருத்தலம்**

கல்வெட்டிலே திருக்காமக்கோட்டம் புதிதாக அமைக்கப்பட்ட திருத்தலம், ஆதிஷேத்திரமாய் ஸ்வயம்புவுமான என்ற அடைமொழிகளைப் பெற்றுள்ளது. அடைமொழிகள் திருகோணமலையிலுள்ள ஒரு ஆதியான பிரபலமான புகழ்பெற்ற திருத்தலத்திற்கு உரியனவாதல் வேண்டும்.

இச்சாசனம் குறிப்பிடும் தலப்பெயரை நண்பர் சுப்பராயலு திருக்கோணமலை என்று சரியாக அடையாளங்கண்டுள்ளார் என்பது எம்வசமுள்ள புகைப்படப் பிரதிகளின் பரிசீலனை மூலம் தெளிவாகின்றது. ஆனால் இக்கல்வெட்டினைப் பற்றிப் பத்திரிகையொன்றில் வெளிவந்த ஒரு கட்டுரையில் திருக்கோணமலை என்பதற்குப் பதிலாகத் தலப்பெயரை திருக்கோயிலென்று அடையாளங்கண்டுள்ளனர். இலங்கையின் சைவக்கோயில்களின் வரலாற்றைப் பற்றிய ஆவணமென்ற வகையில் இக்கல்வெட்டின் பெறுமானம் அதிலே குறிப்பிடப்படும் தலப்பெயரினைச் சரியாக அடையாளப்படுத்துவதிலே தங்கியுள்ளது எனவே தலப்பெயரைச் சரியாக அடையாளப்படுத்துவது ஒரு இன்றியமையாத்தேவையாகின்றது. தலம் பற்றிக் கல்வெட்டில் சொல்லப்படும் அடைமொழிகள் பெயரை எழுதுவதற்குப் பயன்படுத்தியுள்ள எழுத்துக்களின் அடையாளம், அவற்றின் எண்ணிக்கை, தலப் பெயர்களைப் பற்றிய சாசன வழக்கு போன்றவற்றை இங்கு கவனிக்கவேண்டியுள்ளது. நிலாவெளிக் கல்வெட்டின் தலப்பெயர் பற்றிய குறிப்புகளையும் ஒப்பிட்டு நோக்குவது பொருத்தமானது.

பேராசிரியர் சுப்பராயலுவின் வாசகத்திலே தலப்பெயர் தொடர்பான குறிப்பு மேல்வருமாறு அமைந்துள்ளது. "ஆதிஷேத்திரமாய் ஸ்வயம்புவுமான திருக்கோ(ணமலை)". திருக்கோணமலை என்ற பெயரை நீக்கிவிட்டு திருக்கோயில் என்ற பெயராகக் கொள்ளுமிடத்துத் தலம் பற்றிய சாசனக் குறிப்பு பொருளற்றதாகிவிடும். திருக்கோயில் என்ற பெயருடைய ஈஸ்வரம் எதுவும் திருகோணமலைப் பிரதேசத்தில் இருந்தமைக்கான சான்றில்லை. திருக்கோயில் என்ற சொல் பொதுமையில் சைவ, வைணவ் ,பௌத் தக் கோயில்களையும் குறிக்கும். ஆயினும் தேவதானங்கள், பள்ளிச்சந்தங்கள் என்பவற்றை வர்ணிக்கும் சாசனாங்கள் மானியங்களைப் பெற்ற கோயில்களின் தலப்பெயரைக் குறிப்பிடுவது வழமை. தானம் பெறும் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பது அத்தியாவசியமான தேவையாகும்.

தமிழ்மொழி வழக்கில் நிவந்தங்களைப் பெறும் நிறுவனங்களின் இயல்பாக பெயரும் தலப்பெயரும் குறிப்பிடப்படும் என்பதற்கு மேல்வரும் சாசனக் குறிப்புகள் இரண்டும் தக்க உதாரணங்களாகும்.


1. "சாசனம் சாஸ்வதம் (சம்பு) ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமலை மத்ஸ்யகேஸ்வரமுடைய மகாதேவற்கு நிச்சலழிவுக்கு நிவந்தமாக...."

*-நிலாவெளிக் கல்வெட்டு*

2. "விஜயபாஹு" தேவர்க்குயாண்டு 42 ஆவது கந்தளாயான விஜயராஜ சதுர்வேதிமங்கலத்து தென்கைலாஸமான ஸ்ரீ விஜயராஜ ஈஸ்வரம் உடையார்க்கு நங்கை சானி தன் பர்த்தாவான யக்ஞீயகிரமவித்தன் மரித்த பின்பு அவனை நோக்கிச் செய்த தர்மமாவது...."

*-பளமோட்டைக் கல்வெட்டு*

முதலாவது குறிப்பில் நிவந்தங்களைப் பெற்ற கோயிலின் பெயரான மத்ஸ்யகேஸ்வரம் என்பதும் அதன் அமைவிடம் ஸ்ரீகோணபர்வதம் திருக்கோணமலை என்றும் சொல்லப்படுகின்றது. இரண்டாவது சாசனக் குறிப்பில் நங்கைசானி நன்கொடை வழங்கிய ஆலயத்தின் பெயர் தென்கைலாஸமான விஜயராஜ ஈஸ்வரம் என்றும் அது சதுவேதி மங்கலத்தில் உள்ளதென்றும் எழுதப்பட்டுள்ளது.



சாசனமொன்றிலே வழமைப்படி கோயிலின் பெயர் சரியாகக் குறிப்பிடப்படாவிட்டால் அது போலியானது என்ற சிந்தனை ஏற்படுவதற்கும் இடமுண்டு. இங்கு தமிழ்ச் சாசனங்கள் தொடர்பாகப் புரிந்துணர்வுகளின்றி அவ்வாறான கருத்துக்களைச் சொல்வதற்கும் சிலர் தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்விடத்திற் கல்வெட்டிலே பதியப்பட்டுள்ள இடப்பெயரையும் அதில் அடங்கிய எழுத்துகளின் எண்ணிக்கையினையும் கவனிப்பது பொருத்தமானது. தலப்பெயரின் முதல் நான்கு எழுத்துகள் ஒரு வரியின் இறுதியிலும் எஞ்சியவை அடுத்த வரியின் தொடக்கத்திலும் அமைந்துள்ளன. திருக்கோ என்ற முதல் நான்கு எழுத்துகளும் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. அடுத்த வரியிற் காணப்படும் பெயரின் எஞ்சிய எழுத்துகள் மங்கலாகிவிட்டன. அதனால் அவற்றை (ண மலை) என்று அடையாளங்கண்டு அடைப்புக் குறிகளுக்குள் சுப்பராயலு அமைந்துள்ளார்.

டாக்டர் ஜீவராஜ் எமக்கனுப்பியுள்ள புகைப்படங்களோடு பேராசிரியர் சுப்பராயலு உருவாக்கிய சாசனவாசகத்தை ஒப்பிட்டு அவதானிக்க முடிந்தது. உண்மையில் யுடைய நாயனார்க்கு என்ற தொடருக்கு முன் நான்கு எழுத்துகளின் அடையாளங்கள் உள்ளன. அவற்றில் முதலாவது எழுத்து எதுவித தயக்கமுமின்றி ண என்று அடையாளப்படுத்தக்கூடியது. அதனாலே சாசனம் குறிப்பிடும் தலம் எதுவென்பதும் தெளிவாகின்றது. ண என்பதைத் தொடர்ந்து மா, ம என்னும் எழுத்துக்கள் காணப்படுகின்றன. எனவே நான்காவது எழுத்தை லை என்று கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இரண்டாவது வரியின் முதல் நான்கு எழுத்துக்களையும் பற்றிய எமது அவதானிப்புகளின் அடிப்படையிலே ,இச்சாசனம் குறிப்பிடும் தலப்பெயர் திருக்கோணமாமலை என்பது உறுதியாகின்றது.

ஏழாம் நூற்றாண்டுக்குரிய திருக்கோணேஸ்வரத் திருப்பதிகத்திலே மாக்கோணத்து உடையாரை கோணமாமலை அமர்ந்தாரே எனத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் போற்றுகின்றார். ஏறக்குறைய 550 வருடங்களுக்குப் பின் எழுதப்பட்ட கல்வெட்டிலே தல இப்பெயர் திருக்கோணமாமலை என்று மாற்றமின்றி வருவது குறிப்பிடற்குரியது. இந்தத் தலப்பெயரில் எட்டு எழுத்துகள் உள்ளன. மொரதன் கட வலக் கல்வெட்டிலும் தலப்பெயர் எட்டு எடுத்துகளில் அமைந்துள்ளது.

ஆதியாய் ஸ்வயம்புவுமான என்ற அடைமொழி திருக்கோணமாமலைக் கன்றி வேறெந்தத் தலத்திற்கும் பொருந்தாது அதனையொத்த வர்ணனையொன்று திருக்கோணமலை பற்றியதாக நிலாவெளிக் கல்வெட்டிலே காணப்படுகின்றது. அதன் முழுமையான வாசகத்தை ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் கா. இந்திரபாலா வெளியிட்டுள்ளார். வாசகம் எழுதிய கல்வெட்டின் தலைப்பாகம் உடைப்பின் காரணமாக அழிந்துவிட்டது. அதோடு வாசகத்தின் முதல் வரியும் அற்றுப் போய்விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலி மாமா கதைகள்

### வாழத் தெரிந்த எதிரிகள்



அதை எல்லாம் கேட்டு அந்த இரு பிரமுகர்களும் ஆத்திரப் பட்டவர்கள் போல தென்பட்டாலும் அவர்களிடையே எவ்வித சண்டையோ சச்சரவோ ஏற்படவில்லை.

சங்கரன் வையாபுரியின் வீட்டில் திருடத் தன் கையாளை அனுப்பி அவன் திருடும் போது பிடிபடும் படி செய்தான். அவன் வையாபுரியிடம் தன்னை அனுப்பியது வைத்தியலிங்கம் தான் என்று வையாபுரியிடம் கூறினான்.

இதுபோல கோபாலனின் ஆள் வைத்தியலிங்கத்தின் மாடுகளின் தீவனத்தில் விஷம் கலந்த போது பிடிபட்டான். அவனோ தன்னை அவ்வாறு செய்யச் சொன்னது வையாபுரி தான் என்று வைத்தியலிங்கத்திடம் கூறினான்.

வையாபுரியும் வைத்தியலிங்கமும் குற்றவாளிகளை கிராம அதிகாரியிடம் ஒப்படைத்தார்களே யொழிய ஒருவர் மீது மற்றவர் புகார் தொடுக்கவில்லை. பிடிபட்ட இருவரும் தம் செயலை மறைக்க ஏதோ உளறுகிறார்கள் என்று கூறி அவர்கள் பேசாமல் இருந்துவிட்டார்கள்.

ஒருநாள் வைத்தியலிங்கம் கோபாலனை அழைத்து "நீ வையாபுரியைப் பற்றி இது வரை சொன்னெதெல்லாம் பொய் என்றே நான் நினைக்கின்றேன்.

நீ இன்னமும் ஒரு வாரத்திற்குள் வையாபுரியைப் பற்றி உண்மையான தகவல் கொடுக்காவிட்டால் நீதான் உன் ஆளை அனுப்பி அவர் வீட்டில் திருடச்சொன்னாய் என்று கிராம அதிகாரியிடம் புகார் செய்வேன்" என்றார். இது போல வையாபுரியும் சங்கரனிடம் கூறினார்.

இதற்கு பின் சங்கரனும் கோபாலனும் இரகசியமாகச் சந்தித்து "இவர்கள் எதற்கும் மசிய மாட்டார்கள். நாம் தான் அகப்பட்டுக் கொள்வோம் போலிருக்கிறதே. நம்மைப் பற்றி அரசர் என்ன நினைப்பார்? எனவே ஒரு வாரத்திற்குள் ஏதாவது கண்டுபிடித்தாக வேண்டும்" எனத் தீர்மானித்துக்கொண்டார்கள்

இதற்குள் உர விற்பனை பற்றி வையாபுரியுக்கும் வைத்தியலிங்கத்திற்கும் தனித்தனியாக அறிவிக்கப்பட்டது.

உரத்தை நேரடியாக விவசாயிகளுக்கே கொடுக்க வேண்டும் என்றும் வையாபுரி வாயிலாக விற்கக் கூடாதென்றும் வைத்தியலிங்கம் கண்டிப்பாகக் கூறினானர். வையாபுரியோ விவசாயிகளுக்குத் தானே உரத்தை விற்க வேண்டும் என்று வலியுறுத்தினார். (தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




அரசன் தம்மை விட்டு விலகுகிறான் என்பதால் வருத்தம்' இராமன் தம்மை வந்து அணுகுவதால் மகிழ்ச்சி இந்த இரு உணர்வுகளுக்கு இடையில் அவர்கள் தள்ளப்பட்டுத் தத்தளித்தனர்.

"பாசம் எங்களைப் பிரிக்கிறது இராமன் பால் நேசம் எங்களை அழைக்கிறது. எதற்கு நாங்கள் சாய்வது என்று தெரியாமல் வேகிறோம்" என்றனர்.வருவது முறையா? என்று உம்மைக் கேட்கவில்லை.

நான் போவது சரியா இராமன் அந்த முடிவை நான் ஏற்கனவே எடுத்து விட்டேன். 'இரு' என்று சொன்னாலும் நான் இனி இந்த ஆட்சியை விரும்பிச் சுமக்கப் போவது இல்லை".

"நீங்கள் இனிச் சொல்ல வேண்டுவது இராமனுக்கு ஆளும் தகுதி உளதா? என்பதை மட்டும் கூறினால் போதும் உள்ளத்தில் படும் மதிப்புகளைக் கள்ளத்தால் மறைக்காமல் வெள்ளத்துக் கவிப்பெருக்குப்போலத் தடையின்றிச் சொல்ல வேண்டுகிறேன்" என்றான்.

"நீங்கள் மாற்றத்தை ஏற்கிறீர்களா? இல்லையா? என்பது கேள்வி அன்று இராமன் ஏற்றத்தை மட்டும் கூறி, அவனை ஏற்க இசைவு தருகிறீர்களா இல்லையா என்பதை இயம்புக" என்றான்.

"நாட்டு மக்கள் அவனை விரும்புகி [illegible] குத் தகுதி உள்ளது" என்று சுருக்கமாகவும் தெளிவுபடவும் அமைச்சர் உரைத்தனர்.

"அமைச்சர் ஏற்கிறார்களா? அரசன் விரும்புகிறானா என்பன அடிப்படை அல்ல. மக்கள் விருப்பம் தான் முடிவுக்கு உதவுவது" என்று கூறிய அரசியல் கருத்துப் போற்றுவதாய் இருந்தது.

**வசிட்டர் கருத்து**

வசிட்டரை அணுகி அவர் கருத்து யாது? எனத் தசரதன் கேட்டான்.

"அமைச்சர் ஆமோதித்து விட்டனர் நீயும் இதை விரும்புகிறாய் மக்களும் இதை வரவேற்பர் இராமனுக்கும் தகுதி உள்ளது" என்று வசிட்டர் கூறினார் மேலும், தொடர்ந்து இராமனைப் பற்றிய தம் கருத்துகளை விரித்து உரைத்தார்.

"இராமன் யாரோ எவரோ என்று கூறும் நிலையில் இல்லை மா'மன்னன் மகன் அதனால் ஆட்சி உரிமைக்கு அவன் தகுதி உள்ளவன்".

"அடுத்து அவன் மனைவி சீதைபால் பட்டத்து அரசி ஆவதற்கு வேண்டிய நல்லியல்புகள் அனைத்தும் உள்ளன அவள் மக்களுக்கும் நற்பணிகளுக்கும் நடு நின்று தடையாய் இருக்க மாட்டாள்".

"நாட்டு மக்கள் அவனே தலைவனாய் வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் அவன் நல்லாட்சியில் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் அவனும் அவர்களை மிகவும் நேசிக்கின்றான்".

" நீ எடுத்த முடிவு இந்த நாட்டுக்கு நல்ல விடிவே யாகும் " என்று கூறினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது திறமை ஒன்று என்றாலும், அதை ஒளித்து வைப்பது உன்னையே ஒழிப்பதற்குச் சமமாகும்.
*– மில்டன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வட பகுதியை வஞ்சிக்கும் போக்குவரத்துப் பொலிஸார்

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்கள் பதவியேற்றபோது அவரிடம் இருந்து செயற்றிறன்மிக்க சேவை கிடைக்குமென வடபகுதி மக்கள் நம்பினர்.

ஆனால் ஆளுநர் என்று யார் வந்தாலும் அவர்களால் எதுவும் செய்ய முடியாதென்பது இப்போது உறுதியாகிவிட்டது.

அதிலும் நாட்டின் தற்போதைய கந்தறு நிலையில் ஆளுநர் அல்ல, அந்த ஆண்டவனாலும் எதுவும் முடியாதென்றாயிற்று.

எனவே வடக்கு மாகாண ஆளுநரிடம் வடபகுதியின் அபிவிருத்தி பற்றியோ, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புப் பற்றியோ நாம் கேட்கவில்லை.

மாறாக, வடக்கில் நாளாந்தம் நடக்கின்ற விபத்து மரணங்களையாவது தடுக்கின்ற நடவடிக்கை பற்றி ஆராய்ந்தால் என்ன? என்பதுதான் நம் ஆதங்கம்.

வடபகுதியில் நாளுக்கு நாள் நடந்தாகும் விபத்துச் சம்பவங்களில் அருமந்த மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன.

இதுதவிர, வீதியில் இறங்குவதற்குப் பயப்படும் அளவில் வடபகுதியின் போக்குவரத்து நிலைமை உள்ளது.

இதற்கான மூலகாரணம் போக்குவரத்துப் பொலிஸாரின் சேவை வடபகுதியில் மந்தமடைந்துள்ளமையேயாகும்.

ஆம், வடபகுதியில் சிக்னல் பொருத்தப்பட்ட இடங்களைத் தவிர, ஏனைய இடங்களில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெருக்கடிகளைச் சீர்செய்வதற்குப் போக்குவரத்துப் பொலிஸார் சேவையில் ஈடுபடுவதில்லை.

அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் பணியெல்லாம் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன வரிப்பத்திரம், 3ஆம் நபர் காப்புறுதி சான்றிதழ் ஆகியவற்றைச் சோதிப்பதும் விபத்து நடந்தால் நாடா பிடித்து அளப்பதும் என்பதோடு அவர்களின் கடமை முடிந்து விடுகிறது.

ஆனால், வேலைநேரம் தொடங்குகின்ற காலை வேளையிலும் கடமை முடிந்து வீடு திரும்புகின்ற மாலை நேரத்திலும் வடபகுதியின் முக்கிய நகரங்களில் போக்குவரத்து நெருக்கடியால் மக்கள் திக்குமுக்காடுகின்றனர்.

இருந்தும் அதுபற்றி போக்குவரத்துப் பொலிஸார் எந்தவித ஏற்பாடுகளையும் செய்யவில்லை.

அதேநேரம் இதுவிடயத்தில் வடக்கு மாகாண ஆளுநரும் உரிய நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

உண்மையில் வடபகுதியின் போக்குவரத்து நிலைமை எவ்வாறாகவுள்ளதென்பதை அறிவதற்கு யாழ்ப்பாண நகரத்தில் சில மணி நேரம் நின்று அவதானித்தால் போதும், போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்ற சந்திகளில் – வீதிகளில் பொலிஸார் நின்று அவற்றை ஒழுங்குபடுத்துவதில்லை என்ற உண்மையை அறிய முடியும்.

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த எந்தச் சந்திகளிலும் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்படுவதில்லை எனும்போது, வடபகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் குரோத மனப்பாங்குடன் செயற்படுகின்றனர் என்று கருதுவதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

## டிப்பர் வாகனம் மோதியதில் இரு மாணவிகள் படுகாயம்

### முறிகண்டி செல்வபுரத்தில் சம்பவம்

(முறிகண்டி)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி செல்வபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மாணவிகள் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குடும்பத் தேவைக்கான பொருட்களுடன் இரண்டு துவிச்சக்கரவண்டியில் தனித்தனியாக பயணித்துக்கொண்டிருந்த மாணவிகள் மீது, பின்னால் பயணித்த டிப்பர் மோதியுள்ளது.

இதன்போது ஒரே குடும்பத்தை சேர்ந்த பாடசாலை கல்வியை தொடரும் இரு மாணவிகள் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஞா-100)

## ரூ. 1 கோடி பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் மன்னாரில் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் பகுதியில் ஒரு கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

54 ஆவது காலாட் படைப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் நேற்று பிற்பகல் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் மன்னார், எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரென தெரியவந்துள்ளது.

(ஞா-285)

## கார் - மோ. சைக்கிள் சாவகச்சேரியில் விபத்து ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடி சந்திப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காருடன் மோட்டார் சைக்கிள் மோதியே இவ்விபத்து சம்பவித்துள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கோப்பாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 29 வயதான ஜெ.பிரசாந்தன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மாகியப்பிட்டிசந்தை, மதவடி, பெருமாள்கடவை, வைரவர் கோவிலடி-சண்டிலிப்பாய் வவுனியா பிரதேசத்தில் கார்கில்ஸ் பூட் சிற்றி, தேக்கவத்தை (கண்டி வீதி).(கற்குளி) கண்டி வீதி,மலையாபருத்திக்குளம்,வவுனியா 2 வது குறுக்கு வீதி, ஆசிக்குளம், மறக்கறம்பளை-கணேசபுரம் முகத்தாங்குளம் 1 வது பண்ணை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சாவகச்சேரியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(அராலி)

சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் நபர் ஒருவர் நேற்றைய தினம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது சாவகச்சேரி சங்கத்தானை ரயில் நிலையப் பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஒருவர் ஈடுபடுவதாக 52 ஆவது படைப்பிரிவின் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது சாவகச்சேரி மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (ஞா-104)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### ஓங்காரம்



சப்தத்தின் மூலநிலையை **ஓம்** என்ற சொல்லால் உணர்த்துகிறார்கள். **ம்** என்னும் எழுத்தின் மூலம் தான் ஓங்காரத்தின் ஓர் இயல்பைப் பிறருக்கு உணர்த்த முடியும் என்று நினைத்தவர்கள் **ம்** என்ற சப்தம் எழாமல் இருக்க அதை ஞாபக அளவில் உணர்ந்து கொள்ளும்படி விளக்கம் செய்தார்கள்.

ஓசையின் விரிந்துயர்ந்த உச்ச நிலையை உணர்ந்த உயிரெழுத்தாகிய **ஓ** வின் மூலம் சப்தத்தை எழுப்பி, உயர்த்திக் காண்பித்தார்கள். ஓசையின் ஒடுக்க நிலையை **ம்** என்ற ஒலியை அளவில் படிப்படியாகக் குறைத்துக் குறைத்து இசைத்துப் பின் மௌன நிலையில் நினைப்பாகக் காட்டினார்கள்.இவ்வாறு சப்தத்தின் விரிவு நிலை ஒடுக்க நிலை இரண்டையும் முற்காலத்தவர்கள் விளக்கி வைத்தார்கள்.

புலனுணர்ச்சிகளிலே,அறிவைச் செலுத்தி ,நாத தத்துவத்தை அறிவிலே விரிவும் ,தெளிவும் பெறாத பக்தனுக்கு ஒருவாறு விளக்க அறிஞர்கள் முயற்சித்தார்கள்.ஓசையின் உச்ச நிலையை உணர்த்தும் **ஓ** என்ற ஒலியையும் ,எழுத்தையும் ஓசையின் ஒடுக்க நிலையை உணர்த்தும் **ம்** என்ற ஒலியையும் எழுத்தையும் ஓ-ம் (ஓஓஓஓம்) என்று ஒலித்துக்காட்டினார்கள். அவைகளை ஏடுகளில் ஓம் என்ற எழுத்துக்களாக எழுதிக் காண்பித்தனர்.

அந்த இரண்டு ஓசையும் சேர்ந்து ஓம் என்ற தனி ஓசையாயிற்று. அந்த இரண்டு எழுத்தும் சேர்ந்து ஒரு புதிய ஓம் என்ற ஒரு கூட்டு எழுத்தாயிற்று. ஆகையால் ஓம் என்பது ஒரு சங்கேதம்–குறிப்பு (symbol) ஆகும். ஆகவே ஓம் என்ற ஓசைக்கோ, சொல்லிற்கோ எந்தத் தனிச் சிறப்போ , மதிப்போ கிடையாது. புத்தகத்திலுள்ள கருத்தை அறிந்த பின், புத்தகம் மற்றவர்களுக்குத் தேவையாகும் என்று அதைப் பத்திரப்படுத்தி வருகிறோம். அதுபோல் தான் **ஓம்** என்ற சொல்லும் நிலைத்து வருகிறது; தொடர்ந்து வருகிறது.

அந்த ஓங்கார நிலையை உணர்த்துவதற்கும் **ம்** கூடத் தேவையில்லை. இது போன்ற ( ) புள்ளியே போதுமானது. தனிப்புள்ளியில் உச்சரிப்பு ஓசையானது எப்படி ஒடுங்கி இருக்க வேண்டும் என்று கூர்ந்து உணர்ந்து ஓங்காரத்தின் இயல்பை நன்றாய் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 12

2016 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (61%) அதைத்தொடர்ந்து கைத் தொழிற் துறையில் (33%) மற்றும் விவசாயத் துறையில் (6%) ஆகும்.

**நாட்டின் மிகச்சிறிய மாகாணம் மேல்மாகாணமாகும். இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் அமையப் பெற்றுள்ள மேல்மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பான 3,684 சதுர கிலோமீற்றரில், 699 சதுர கிலோமீற்றர் கொழு ம்பு மாவட்டத்திற்கும்,1,387 சதுர கிலோமீற்றர் கம்பஹா மாவட்டத்திற்கும், 1,598 சதுர கிலோமீற்றர் களுத்துறை மாவட்டத்திற்கும் உட்பட்டதாகும்.இலங்கையின் பொருளாதாரத்திற்கு 2015 ஆம் ஆண்டில் 41 சதவீதமான பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. சனத்தொகை கணக்கெடுப்பின் (2012) அடிப்படையில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 28.7 வீதம் மேல்மாகாணத்தில் வசிக்கின்றனர்.**

### மேல் மாகாணத்தின் மொத்த சனத்தொகை,சன அடர்த்தி மற்றும் கல்வியறிவு-2012

சனத்தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பின் (2012) அடிப்படையில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 28.7 வீதத்திற்குச்சமமான சனத்தொகையான 5,851,130 பேர் மேல் மாகாணத்தில் வசிக்கின்றனர்.மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 2,324, 349 (39.7%) மக்கள் கொழும்பு மாவட்டத்திலும், 2,304,833 (39.4%) மக்கள் கம்பஹா மாவட்டத்திலும், 1,221,948 (20.9%) மக்கள் களுத்துறை மாவட்டத்திலும் வாழ்ந்து வருகின்றனர்.

மாகாணத்தின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 1628 நபர்களாகும்.இது நாட்டின் அதிக சனத்தொகை அடர்த்தி கொண்ட நகரமயமாக்கப்பட்ட மாகாணமாகும். 2012 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்புக் கமைய,10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு மட்டம் 98.0 சதவீதமாகும்.

### மேல் மாகாணத்தின் ஆண் பெண் பால்நிலைக்கமைய சனத்தொகை வேறுபாடு- 2012

இந்த மாகாணத்தினதும், அதன் மாவட்டங்களினதும், இலங்கையினதும் ஆண் பெண் பால்நிலைக்கமைய சனத்தொகை வேறுபாடு அட்டவணை 1அ வில் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய நாட்டின் ஏனைய மாகாணங்களைப் போன்றே இந்த மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையைவிட அதிகரித்துக் காணப்படுவதை அட்டவணை(C) மூலம் காணமுடியும்.

(38.8%) கொண்டுள்ளது. நாட்டின் நகர்ப்புற சனத்தொகையில் 61.3% மக்கள் மேல் மாகாணத்தில் வாழ்கின்றனர். சனத்தொகையின் பிரிவுகளுக்கமைய வேறுபாடு அட்டவணை (d) இல் காட்டப்பட்டுள்ளது.

### மேல் மாகாணத்தின் இனப் பிரிவுகளுக்கமைய சனத்தொகை வேறுபாடு-2012

மேல் மாகாண சனத்தொகையில் பெரும்பான்மையினர் சிங்கள இனப் பிரிவு மக்கள் (84.2%) ஆவர். அதற்கு அடுத்ததாக கூடிய இனப் பிரிவினரான இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை (7.9%) ஆகுமொன்பதோடு.அதற்கு அடுத்ததான சனத்தொகை இலங்கைத் தமிழர் இனப்பிரிவினர் (5.8%) ஆகும்.

அதற்கடுத்தாக ஏனைய இனப் பிரிவினரான 4% மக்கள் இந்தியத்தமிழர், பறங்கியர், மலாயர், இந்திய மற்றும் இலங்கை செட்டியார் ஆகிய இனப்பிரிவு மக்கள் உள்ளனர்.இலங்கையின் சிங்கள இனப்பிரிவு மக்கள் தொகையினரில் 32.3(%) வீதத்தினரும், இலங்கைத் தமிழ் மக்கள் தொகையில் 15(%) வீதத்தினரும், இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகையில் 24.3 (%) வீதத்தினரும் மேல் மாகாணத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

### மேல் மாகாணத்தின் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-2012

மேல் மாகாணத்தில் பெரும்பான்மையினர் பௌத்த சமயத்தவர்களாகும் (73.4%). அதற்கடுத்ததாக முறையே றோமன் கத்தோலிக்கர்கள் (11.1%) வீதமும் மற்றும் இஸ்லாம் சமயத்தவர்கள் (8.6%) வீதத்தினரும் ஆகும். நாட்டின் மொத்த பௌத்த மக்களில் 30.1% வீதத்தினர் மேல் மாகாணத்தில் வாழ்கின்றனர்.

அதற்கு நேரொத்ததாக இந்து, இஸ்லாம் மற்றும் றோமன் கத்தோலிக்க மக்கள் முறையே. 10.9% மும், 25.5% மும் மற்றும் 51.7% வீதமும் ஆகும்.

அட்டவணை (C)

ஆண் பெண் பால்நிலைக்கமைய சனத்தொகை வேறுபாடு மேல் மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத் தொகை | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கொழும்பு | 2,324,349 | 1,140,472 | 49.1 | 1,183,877 | 50.9 |
| கம்பஹா | 2,304,833 | 1,116,893 | 48.5 | 1,187,940 | 51.5 |
| களுத்துறை | 1,221,948 | 591,284 | 48.4 | 630,664 | 51.6 |
| மேல் மாகாணம் | 5,851,130 | 2,848,649 | 48.7 | 3,002,481 | 51.3 |

### மேல் மாகாணத்தின் பிரதேச பிரிவுகளுக்கமைய சனத்தொகை வேறுபாடு-2012

ஒப்பீட்டளவில் இம்மாகாணம் உயர் நகரமயமாக்கலுக்கு உட்பட்டதாகக் காணப்பட்ட போதிலும், மேல் மாகாணத்தின் சனத்தொகையில் பெரும்பான்மையானோர் 60.4% மான மக்கள் கிராமிய பிரதேசங்களிலேயே வாழ்கின்றனர்.

வேறு மாகாணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மேல் மாகாணத்தில் நகர்ப்புற சனத்தொகை உயர் பெறுமதியொன்றைக்

அட்டவணை (d): பிரிவுகளுக்கமைய சனத்தொகை வேறுபாடு- மேல் மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | நகர | | கிராமிய | | தோட்டப்பகுதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கொழும்பு | 2,324,349 | 1,802,904 | 77.6 | 513,534 | 22.1 | 7,911 | 0.3 |
| கம்பஹா | 2,304,833 | 360,221 | 15.6 | 1,943,418 | 84.3 | 1,194 | 0.1 |
| களுத்துறை | 1,221,948 | 109,069 | 8.9 | 1,075,246 | 88.0 | 37,633 | 3:1 |
| மேல் மாகாணம் | 5,851,130 | 2,272,194 | 38.8 | 3,532,198 | 60.4 | 46,738 | 0.8 |

மேல் மாகாணத்தின் நிர்வாக ரீதியான மற்றும் உள்ளூராட்சி மற்றும் தேர்தல்கள் அதிகாரப் பிரதேசக் கட்டமைப்பு மேல் மாகாணத்தின் நிர்வாக ரீதியான மற்றும் உள்ளூராட்சி மற்றும் தேர்தல்கள் அதிகாரப் பிரதேசக் கட்டமைப்பு தொடர்பான விபரங்கள் அட்டவணை (e) ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை (e) நிருவாக ரீதியான மற்றும் உள்ளூராட்சி கட்டமைப்பு - மேல் மாகாணம்

| பிரதேசம் | பிரதேசசெயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | மாநகர சபை | நகர சபை | பிரதேச சபை |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 13 | 557 | 5 | 5 | 3 |
| கம்பஹா | 13 | 1,177 | 2 | 5 | 12 |
| களுத்துறை | 14 | 762 | - | 4 | 13 |
| மேல் மாகாணம் | 40 | 2496 | 7 | 14 | 28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## டெங்கு காய்ச்...

கைச் சேர்ந்த வாகீசன் விதுசன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 6 நாட்களாக காய்ச்சல் காரணமாக குழந்தைக்கு ஆயுர்வேத வைத்தியம் செய்தபின் மேலதிக சிகிச்சைக்கு குழந்தை யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளது.

டெங்குக் காய்ச்சல் காரணமாகவே பாலகனின் இறப்பு இடம்பெற்றதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மரண விசாரணையை மேற்கொண்டார்.

(ஞா-30,33,104)

## வவுனியாவில்...

வவுனியா குருக்கள் புதுக்குளம் பகுதியில்-மன்னார் பறயநாலங்குளம் பிரதான வீதியில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி வருகைதந்து கொண்டிருந்த தனியார் பேருந்து குருக்கள் புதுக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது உள் வீதியில் இருந்து பிரதான வீதிக்கு ஏறிய மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற தந்தை சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பலியாகியதுடன், அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்தார்.

விபத்தினையடுத்து ஆத்திரமடைந்த கிராம மக்கள் பேருந்தினை தாக்கியமையால் குறித்த பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த பூவரசங்குளம் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சம்பவத்தில் குருக்கள் புதுக்குளம் பகுதியை சேர்ந்த பு.சிறிதரன் (வயது - 46) மற்றும் அவரது 14 வயது மகனான டினோகாந் ஆகிய இருவரே மரணமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ஞா-250,299)

தன நிதானய
திகதி - 2022.03.06
சீட்டிழுப்பு இலக்கம் - 728
G 20 63 64 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

மஹஜன சம்பத
திகதி 2022/03/06
சீட்டிழுப்பு இலக்கம் 4698
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
M 6 5 8 8 7 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1046
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
L 18 02 09 41 47

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1220
வெற்றி இலக்கங்கள்
தனுசு 9 2 9 3 3 3
தேசிய லொத்தர் சபை

## ஆடைத் தொழிற்...

ணித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி திருவையாறு பகுதியை சேர்ந்த பத்மநாதன் சஞ்ஜீவன் எனும் 29 வயதுடையவர் உயிரிழந்துள்ளார். இவர் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிபவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(ஞா-100,316)

## வீட்டில் வெடி...

கிடைத்த தகவலுக்கமைய மேற்படி வீட்டில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணவனும் மனைவியும் போரின் போது கைவிடப்பட்ட வெடிகுண்டுகளை உடைத்து வீட்டில் வைத்திருந்தமை கண்டறியப்பட்ட நிலையிலேயே கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞா)

## மீண்டும்...

"இதன்படி, E மற்றும் F ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் சுழற்சி முறையில் 5 மணித்தியாலங்கள் மின் துண்டிக்கப்படும்.

குறித்த வலயங்களில், மாலை 6 மணி முதல் இரவு 11 மணிவரையான காலப் பகுதியினுள் இரண்டரை மணித்தியாலங்கள் மின் துண்டிக்கப்படும். (ஞா)

## விமல், கம்மன்...

உதய கம்மன்பில ஆகியோருக்குத் தொடர்ந்தும் அமைச்சரவை அமைச்சர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக்குச் சமமான பாதுகாப்பை வழங்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் விமல் மற்றும் கம்மன்பில ஆகியோர் அலரி மாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## இலங்கை வர...

மொழிபெயர்ப்பாளர், வழக்குப் பணிப்பாளர் உள்ளிட்ட ஐந்து பிரதிநிதிகள் இவ்வாறு இலங்கை விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்தனர்.

இந்தப் பிரதிநிதிகள் காணாமல்போனவர்களின் குடும்பங்களைச் சந்திக்கவும், வடக்கு தமிழ் அரசியல்வாதிகளைச் சந்திக்கவும் திட்டமிட்டிருந்தனர்.

எனினும், குறித்த பிரதிநிதிகளின் இலங்கை விஜயத்திற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஞா)

## ஒட்டுசுட்டானில்...

துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த நால்வரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பத்தினை தொடர்ந்து உடனடியாக விரைந்து செயற்பட்ட ஒட்டுசுட்டான் பொலிஸார் மூன்று பேரைக் கைது செய்துள்ளார்கள். (ஞா)

### பாராளுமன்றத்தில்

# விமல், கம்மன்பிலவுக்கு பின்வரிசை ஆசனம்

(கொழும்பு)

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டமை மற்றும் சில அமைச்சரவை மாற்றங்களினால் பாராளுமன்ற ஆசனப் பங்கீட்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன்படி, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு அரசாங்கத்தில் பின்வரிசை ஆசனம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் பின்வரிசையில் 73ஆவது ஆசனத்தைவிமல்வீரவன்ஸவும், ஆளும் கட்சியின் 78ஆவது ஆசனத்தை உதய கம்மன்பிலவும் பெறவுள்ளனர்.

புதிய கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க பாராளுமன்றத்தில் மிகவும் சிரேஷ்ட உறுப்பினர் என்பதனால் அவருக்கு முன்வரிசை 2ஆவது ஆசனம் (முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசனத்திற்கு அருகில்) வழங்கப்பட்டுள்ளது. (ஞா)

## ஆட்சியை...

நிலை ஏற்பட்டுள்ளது.

மக்களின் வாக்குகளின் ஊடாக மாத்திரமே ஆட்சியைக் கவிழ்ப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்தார்.

இந்த அரசு நாட்டைச் சீரழித்துள்ளது. தன்னால் முடியாது என்பதை செயல்கள் ஊடாக ஒப்புக்கொண்டுள்ளது. .

எனினும், உறுப்பினர்களை வளைத்துப்போட்டு, ஆட்சி மாற்றம் செய்யும் நடைமுறை எமக்குப் பொருந்தாது. ஜனநாயக வழியிலான மாற்றமே தேவை. அதற்கான வலியுறுத்தல் கொடுக்கப்படும் என்றார். (ஞா)

## கூட்ட...

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஜிப்ரிக்கோ உட்பட அவரது குடும்பத்தினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இளவாலைபொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் தாக்குதலுக்குள்ளான அவரது குடும்பத்தினர் அனைவரும் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் அவரது ஒரு சகோதரியும் தந்தையும் தாயும் மல்லாகம் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று ஜிப்ரிக்கோவின் வீட்டிற்கு சென்ற வாள்வெட்டு கும்பல் ஒன்று அவரது உடைமைகளை சேதமாக்கியதுடன், செல்லமாக வளர்த்த கிளியையும் வெட்டி வீசிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஞா-104)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1675 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 06.03.2022 தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
A 35 48 61 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 51,016,634/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.06
சீட்டிழுப்பு இல: 3836
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,605,360/-
வெற்றி இலக்கங்கள்
23 29 39 51 D
ஆங்கில எழுத்து
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 143
சீட்டிழுப்பு திகதி 06.03.2022
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
32 36 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,112,940/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 06.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3387
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் கடகம்
09 29 50 57
3 3 3 6 9 1 0
வெற்றி டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,522,680/-

12 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 23 08 41 43 64
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 851
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.03.06 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 219,173,929/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1501
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.03.06
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,516,900/-
வெற்றி இலக்கங்கள்
17 50 56 65 E
ஆங்கில எழுத்து
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10470)

குரு - 077 623 4204, 077 288 0152
076 658 3621, 077 911 6983



## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு (10510)

076 239 9874


## வெள்ளவத்தையிலிருந்து யாழிற்கு இரவு நேர ரயில் சேவையை ஆரம்பிக்கத் திட்டம்

(கொழும்பு)

வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணம் வரை புதிய ரயில் சேவையை ஆரம்பிக்க ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி வெள்ளிக்கிழமைகளில் வெள்ளவத்தையில் இருந்து இரவு 10.00, மணிக்கு யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10.00 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 5 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திற்கும் சென்றடையும்.

இந்த ரயிலில் 530 பயணிகள் பயணிக்க முடியும். விரைவில் இந்த இரவு நேர ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஞா-104)


## Distributors wanted

We are leading manufacturers of high quality organic agricultural products in the North. We want to appoint distributors for our promising, proven products.

**விநியோகஸ்தர்கள் தேவை**

வட இலங்கையின் முதல் தரமான எமது இயற்கை விவசாய உற்பத்திகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

மண்புழு உரம் (Vermicompost), பூச்சி விரட்டிகள் (Pesticides), வளர்ச்சி ஊக்கிகள் (Growth promoters), பயிர்ப் பைகள் (Grow Bags).

இயற்கை விவசாயத்துக்கான சந்தை துரித வளர்ச்சி நிலையில் உள்ளது. ஏற்கனவே இயங்கும் உங்கள் விநியோக நடவடிக்கைகளோடு இணைத்துக் கொள்ளவோ, அல்லது புதிதாகத் தொடங்கவோ விரும்பினால், இது ஒரு அரிய சந்தர்ப்பம். (10511)

திருநாவுக்கரசு நினைவு மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்

MAVAI

077 055 3143 slstrust@hotmail.com



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10483)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (10507)

தொடர்பு: றாஜ் - 077 679 6623





## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS (C-3862)

எமது கிளைகள்: கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால கைக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



## சாரதி மற்றும் பணியாளர் தேவை

கரடிபோக்குச் சந்தி கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பாரஊர்தி சாரதிகள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் ஹாட்வெயார் அனுபவம் உள்ள பணியாளர் மற்றும் சீமெந்து விற்பனைப் பிரதிநிதி போன்றோர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

குரு ஹாட்வெயார்
இல. 175, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி
T.P : 077 743 5265 (C-3906)



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

0768226240 DHL (C-3862)


# மரண அறிவித்தல்



பிறப்பு 02 - 08 - 1943

இறப்பு 06 - 03 - 2022

## திருமதி தம்பிராசா ஞானம்பிகை
### (அம்பிகை)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா ஞானம்பிகை நேற்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன், றஞ்சிதமலர், ஸ்ரீகாந்தன், கனகேஸ்வரி, புஸ்பகாந்தி, ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் காலஞ்சென்ற ஸ்ரீபவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற சுபத்திராதேவி, இரத்தினசிங்கம், ஜெயராணி, ஸ்ரீவேல், குகநாதன், சுரேகா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, தியாகராஜா, கணேசலிங்கம் மற்றும் முருகையா, மகேஸ்வரன், சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.03.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (வேம்பன் வீதி, உரும்பிராய்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (10520)

உரும்பிராய் 077 778 9815 தகவல் :- குடும்பத்தினர்


## வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்தி பலாலி வீதி யாழ்ப்பாணத்தில் 50 அடி நீளமும் 14 அடி அகலமும் கொண்ட 3 மாடி கடை வாடகைக்கு உண்டு. வாடகை பேசித் தீர்மானிக்கப்படும். தரகர் தேவை இல்லை. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (10495)

074 278 0099



## மணமக்கள் தேவை

லண்டனில் வசிக்கும் மணமகன், மணமகளுக்கு ஐரோப்பாவில் வசிக்கும் மணமக்கள் தேவை.

தொடர்பு (10429)

Viber, Whatsapp
00447809892218



## நீர்க் கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு Water Proofing

மழையோ ஓய்வதாக இல்லை...! நீர்க்கசிவு பிரச்சினையோ தீருவதாக இல்லை. அடாது மழையிலும் விடாத நீர்க்கசிவை உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள் போன்ற இடங்களில் ஏற்படும் நீர்க்கசிவு, ஊறல் போன்றவற்றை உத்தரவாத சான்றிதழுடன் நிரந்தரமாக நிறுத்தித் தருகின்றோம்.

Skyline Holders (Pvt) Ltd.
No.89, Old Park Road, Jaffna.
077 722 0095/ 076 663 6481/ 021 221 4994 (10515)

முல்லைத்தீவு/ கிளிநொச்சி → 077 741 4960 | மன்னார்/ வவுனியா → 077 279 0743


# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன இயக்குநரும் இந்து நாகரீக பாட ஆசிரியருமாகிய த.ஸ்ரீஸ் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
## தம்பிராசா ஞானம்பிகை

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

DCM சமூகம் யாழ். நகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.